Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No.553/2024

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.8 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 8 | தொழில் | - | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| பெயர். | - | மணி | வட்டம் | - | செஞ்சி |
| த/பெ. | | சின்னையா | சமயம் | - | |
| கிராமம் | - | செஞ்சி | வயது | - | 61 |

16.02.2026

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை**

1. நான் திண்டிவனம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி கடந்த 2025 ம் வருடம் பணிஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 26.08.2023 ம் வருடம் 13.00 மணியளவில் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது பா.கிளியனூர் கிராமத்தை சேர்ந்த ஜெயராமன் மகன் முருகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.575/2023 ச/பி. 294(பி), 324, 506(2) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அசாஆ.7 ஆகும்.**

2 .மேற்படி வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே 14.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சீனிவாசன் மற்றும் முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். **அந்த மாதிரி வரைபடம் அசாஆ.8 ஆகும்**. அதே சாட்சிகளின் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து இந்த சம்பவத்தில் எதிரி பயன்படுத்திய 1/2 கிலோ எடை கொண்ட மரப்பிடியுடன் கூடிய இரும்பு சுத்தி ஒன்றை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.9 ஆகும்**.

3. பின்பு சாட்சிகள் முருகன், ஏழுமலை, சந்தோஷ்குமார், ராஜசேகர், செந்தில்குமார், சீனிவாசன், முருகன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரியை தேடிச்சென்றதில் அன்றே 15.30 மணியளவில் திருவெண்ணெய்நல்லூர் கடைவீதி பஸ் நிறுத்தம் அருகே காரணம் கூறி கைது

செய்து நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

4. பின்னர் காயம்பட்ட தினேஷ்குமார் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.ராஜு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு அறிக்கை பெற்றேன். அதில் மருத்துவர் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என கருத்து தெரிவித்துள்ளார். பின்னர் கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.10 ஆகும்**. இத்துடன் எனது வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது ச/பி. 294(பி), 324, 506(2) இதச படி படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.